முருகப்பெருமான் துணை

**மகான் நின்றசீர்நெடுமாற நாயனார் அருளிய அனுகூல ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

17.03.2023, வெள்ளிக்கிழமை

1. பிரணவக் குடில் படைத்த அரங்கா
 பிரபஞ்சம் காக்கும் வண்ணம்
 சரவணச் சுடரேற்றி அருளும்
 சற்குருவே ஆறுமுக அவதாரமே
2. அவதார வள்ளலே ஞானியே
 அண்ணலே உன் பெருமை கூறி
 அவனியில் சுபகிருது சேல் திங்கள்
 அறிவிக்க சூல திகதி புகர் வாரம்
 (சுபகிருது வருடம் பங்குனி மாதம் 03 ம் நாள், 17.03.2023, வெள்ளிக்கிழமை)
3. வாரமதில் அனுகூல ஆசிதனை
 வழங்குவேன் நின்றசீர்நெடுமாற நாயனாரும்
 சோரமிலா ஞான உலகம் அமைய
 சுருதி அரங்கஞானி கேட்க உரைப்பேன்
4. உரைக்கவே நல்வழி காட்டுகின்ற
 உயர் ஞானி அரங்கன் உபதேசம்
 மறையாக மக்களெல்லாம் ஏற்று
 மார்க்கமென சரணாகதி கொண்டு
5. கொண்டுவர மனத்தெளிவு திடம்
 குருவருள் காக்கும் எனும் மனபலம்
 உண்டாகி உலக மக்களிடை
 உயர்வும் சிறப்பும் காண்கும்
6. காண்கவே கலியிடர் வெல்லும்
 கந்தவேலன் அருளும் தயவும்
 தொண்டுவழி யாவர்க்கும் கிட்டி
 தெய்வபலமாகவே மாற்றம் வந்து
7. வந்துமே சுயநலம் மறந்து
 வள்ளலின் தரும சேவையை
 சிந்தையில் ஏற்றி நலிந்தவர்க்கு
 சேவையாற்றும் உயர் குணமாகி
8. ஆகியே ஞானிகள் வகுத்த
 அற்புதமான அறத்தின் களம்
 மகிழவே கண்டு உலகோர்
 மாதரும சேவைதனை ஆற்றிட
9. ஆற்றிட உலகத்தின் தீவினை
 ஆளுமை எதிர் வினையெல்லாம்
 மாற்றம் கண்டு உலகம் தன்னில்
 மகத்துவமிக்க ஞானவான்கள் தலைமை

10. தலைமை பெருகி இனிதே
தாமுரைப்பேன் ஞான ஆட்சி
கலகம் ஊழல் கயமையில்லா
கண்ணியமிக்க ஆளுமையாக

11. ஆகவே உலகமதும் சிறந்து
ஆறுமுகப் பெருமான் ஆசிதர
மகான் அரங்கன் அவதார நோக்கம்
மண்ணுலகில் பூர்த்தியாக நேரும்
அனுகூல ஆசி முற்றே

–சுபம்–